aglasem.com

FOR AP CLASS 10 PREPARATION

AP SSC Model Paper 2027 Tamil First Language - Model Paper 2

EXAM	YEAR	TYPE	SUBJECT
AP Class 10	2027	Sample Paper	Tamil

BLUE PRINT & MODEL PAPERS OF SSC PUBLIC EXAMINATIONS FOR THE ACADEMIC YEAR – 2026 -2027

BY THE DIRECTOR OF GOVERNMENT EXAMINATIONS (SSC), A.P. 01A & 02A

TAMIL (FIRST LANGUAGE)

தமிழ் (முதன்மை மொழி)

மாதிரி வினாத்தாள் – 1 : 2026 – 2027

(MODEL QUESTION PAPER – 2026 – 2027)

காலம் : 3 ம 15 நி. **மொத்த மதிப்பெண் : 100**

மாணவர்களுக்கான குறிப்புகள் :

1.வினாத்தாள் மூன்று பகுதிகளாக உள்ளது.

2.வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்களும், விடைகளை எழுதுவதற்கு 3 மணி நேரமும் தரப்பட்டுள்ளது.

3.வினாக்களுக்கான விடைகளை, விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.

4.விடைகளை திருத்தமாகவும், தெளிவாகவும் எழுத வேண்டும்.

பகுதி – I

I.புரிந்து கொள்ளுதல் (60 மதிப்பெண்கள்)

1. கீழ்க்காணும் செய்யுளுக்கு பதவுரை, கருத்துரை எழுதுக. 8 ம

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்

கொண்டல்கண் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்

தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்

வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ

(அல்லது)

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!

முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே !

கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்

மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com

2.கீழ்க்காணும் உரைநடையைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி. 8 மதிப்பெண்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அவ்வாண்டில் வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26 ஆம் நாள், சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் சால்வன் குப்பம் என்னும் பகுதியில் மா. பொ. சிவஞானம் பிறந்தார். அவருடைய பெற்றோர் பொன்னுசாமி, சிவகாமி ஆவர். இவருடைய இயற்பெயர் ஞானபிரகாசம். ஆனால் சரபையர் என்ற முதியவர் இவரை 'சிவஞானி' என்று அழைத்தார். பின்னாளில் சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

வினாக்கள் :

அ. ம.பொ.சிவஞானம் எப்போது, எங்கு பிறந்தார் ?

ஆ. சுதேசிக் கப்பல் நிறுவனத்தை, எப்போது யார் தொடங்கினார் ?

இ. ம.பொ.சிவஞானத்தின் இயற்பெயர் என்ன ?

ஈ. 'சிவஞானி' என்று பெயரிட்டவர் யார் ?

3. கீழ்க்காணும் துணைப்பாட நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக. 8 மதிப்பெண்.

அ. ஜவகர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்ற பெரியோர் பாராட்டியதைப் பெருமையாகக் கருதினார்.

ஆ. மீரா திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை அவருக்குத் தந்தது.

இ. தனது பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பாராட்டைப் பெற்றார்.

ஈ. ஐந்தாம் வகுப்பு வரைதான் கல்வி பயிலும் வாய்ப்பு எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு கிட்டியது.

கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடையளி. 3×4=12 மதிப்பெண்.

4. பரிபாடல் - நூற்குறிப்பு எழுதுக ?

5. வாய்மை பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக ?

6. 'பூரணர்' பண்பு நலனைக் குறித்து எழுதுக ?

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. **5×2=10 மதிப்பெண்.**

7. (அ) 'தண்பெயல்' தலைஇய ஊழியும்' 1 ம.

(அடிக்கோடிட்ட சொல்லிற்கு பொருளைக்காண்)

அ) குளிர்ந்த மழை ஆ) குளிர்ந்த காற்று

இ) யுகம் ஈ) முறை

(ஆ) 'பந்தர் இளங் கமுகின் பானையும்' 1 ம

(அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைக் காண்.)

அ) பாக்கு ஆ) சங்கு

இ) முத்து ஈ) பவளம்

8.(அ) 'மலை' எனப் பொருள்தரும் பலசொற்களை எழுதுக. . 1 ம.

அ)கரி,களபம் ஆ) கிரி, வெற்பு

இ) வேங்கை, பறவை ஈ) புணரி, வேலை

(ஆ) 'வேழம்' என்பதன் இருபொருளைக் காண். 1 ம

அ) யானை, கரும்பு ஆ) மூங்கில், சிங்கம்

இ) வேங்கை, புலி. ஈ) வேப்பமரம், சிறுத்தை

9. (அ) 'மூவேந்தர்' - இத்தொகைச்சொல்லை விரித்தெழுதுக. 1 ம.

அ) சேர, சோழ, பாண்டியர் ஆ) மன்னன், வேந்தன், அரசன்

இ) இயல், இசை, நாடகம் ஈ) வேப்பம், ஆலம், நாவல்

(ஆ) 'CULTURE' – எனும் ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொல்லைக் காண். 1 ம

அ) மாறுதல் ஆ) பண்பாடு

இ) மனிதவளம் ஈ) ஊடகம்

10. (அ) படித்தனர்' என்பது எவ்வகை இடம்? காண். 1 ம

அ) தன்மை ஆ)முன்னிலை

இ)படர்க்கை ஈ) செயற்கை

(ஆ) 'தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம்' என்று கூறுதல் எவ்வகை வழு ? காண். 1 ம

அ) திணை ஆ) பால்

இ) இடம். ஈ) மரபு

11. அ) இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை உள்ள சிறுபொழுதை இவ்வாறு கூறுவர் ? 1 ம.

அ) எற்பாடு ஆ) வைகறை

இ யாமம் ஈ) நண்பகல்

ஆ) இருநாட்டு அரசர்களும் உழிஞைப் பூவைச் சூடிப் போரிடுவதன் நோக்கம் யாது? காண். 1 ம

அ) வலிமையை நிலைநாட்ட ஆ) கோட்டையை முற்றுகையிடல்

இ) ஆநிரை கவர்தல் ஈ) நாட்டைக் கைப்பற்றல்

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 5×1=5 மதிப்பெண்.

12. புறநானூறு – இச்சொல்லைப் பிரித்து எழுதுக ? 1 ம

அ) புற+நானூறு ஆ) புறம்+நான்கு+நூறு

இ)பு+ற+நூறு ஈ) புற+நா+நூறு

13. . 'தணிந்தது' – இப்பகுபதத்தில் அமைந்துள்ள இடைநிலையைக் காண். . 1 ம

அ) தணி ஆ) த்

இ) அ ஈ) ந்

14. இருவர் உரையாடுவது போன்ற ஓசை எது? காண். 1 ம

அ) அகவல் ஆ) செப்பல்

இ) துள்ளல் ஈ) தூங்கல்

15. 'எட்டு' என்பது எவ்வகை மொழி'. 1 ம

அ) கனிமொழி ஆ)தனிமொழி

இ) தொடர்மொழி ஈ) பொதுமொழி

16. 'வெள்ளம்தீப் பட்டது என வெரீஇப் புள்ளினம்'. 1 ம

(அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு காண்)

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 9×1=9 மதிப்பெண்.

17. 'வளவன் படம் வரைந்தான்' , - இத்தொடரை எதிர்மறைத் தொடராக மாற்றி எழுதுக. 1 ம

18. 'வந்தார் அண்ணன்' – அடிக்கோடிட்ட சொற்றொடர் எவ்வகைத் தொகாநிலைத்தொடர் ? 1 ம

19. வீசுதென்றல்' என்பது எவ்வகைத்தொகை? 1 ம

20.நேற்று மழை பெய்தது. அதனால் பள்ளிக்கு விடுமுறை. 1 ம

(இத்தொடரைக் கலவைத்தொடராக மாற்றுக)

21.கனிமொழி ஓவியம் வரைந்தாள்' – இச்செய்வினைத் தொடரை செயப்பாட்டு வினைத்தொடராக மாற்றுக ? 1 ம

22. 'சிலை – சீலை' (கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.) 1 ம

23. ஓடி வாருங்கள்! இங்கே ஓடி வாருங்கள்! என்பது எவ்வகைத்தொடர். 1 ம

24. ஒரு எழுவாய் ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளை கொண்டிருக்கும் தொடர் யாது? 1 ம

25. கீழ்க்காணும் பழமொழியை நிறைவு செய்க. 1 ம

ஒரு பானை _____

பகுதி – II

II.உணர்திறன். 20 மதிப்பெண்

கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு முதல் பத்து வாக்கியங்களில் விடையளி. 2×8=16 ம

26. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களை பாராட்டி எழுதுக.

(அல்லது)

சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

27. 'போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

'மனிதனால் மாசடையும் நான்' – காற்று கூறுவதை விவரித்து எழுதுக.

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 2×2=4ம

28. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.
(மேற்காணும் குறட்பாவில் இடம்பெறும் அணியைச்சுட்டி விளக்கம் தருக)

29. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
(மேற்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு எழுதுக.)

பகுதி – III

III. படைப்பாற்றல். 20 மதிப்பெண்

கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு முதல் பத்து வாக்கியங்களில் விடையளி. 2×8 = 16.

30. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன, அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.

(அல்லது)

உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

31. 'புதிய நம்பிக்கை' கதையை சுருக்கி எழுதுக.

(அல்லது)

'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களை தம்முயிர் போல் நேசிக்கும் பண்பினை விவரிக்கவும்.

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி. 2×2=4

32. ஆறப்போடுதல் – இம்மரபுத் தொடருக்குப் பொருள் எழுதுக.

33. சிலை மேல் எழுத்துப்போல – இவ்வுவமைத் தொடரை வாக்கியத்தில் அமைக்கவும்.
